விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 351 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை (05.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### பேரிடரிலிருந்து மீள்வதற்கு
## ரூ.50 பில்லியன் குறை நிரப்பு மதிப்பீட்டு பிரேரணை சமர்ப்பிப்பு
### அமைச்சரவையும் அனுமதி

(கொழும்பு)

திடீர் அனர்த்த நிலைமையால் ஏற்பட்டுள்ள பேரிடரிலிருந்து மீள்வதற்கு 50 பில்லியன் ரூபாய் குறை நிரப்பு மதிப்பீட்டு பிரேரணை நேற்று முன்தினம் (03) பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக்கு அனர்த்த நிதியாக ரூ.1,872 மில்லியன் ஒதுக்கம்



(கொழும்பு)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்திற்காக முதற்கட்டமாக சுமார் 1,872 மில்லியன் ரூபாய் அனர்த்த நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு

15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு மாகாணத்தில் பேரிடரால்
# சேதமடைந்த வீதிகள் விரைவில் சீரமைப்பு
### வடக்கு வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பேரிடரால் சேதமடைந்த வீதிகளின் சீரமைப்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுவதாக வட மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் அபிராமி வித்யாபரன் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்தத்தால் மரணித்தோர்
## 486 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 486 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று (04) பி.ப 7

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையை மீட்க சர்வதேச உதவிகள்
### ஜனாதிபதி ஊடகப் பிரிவு

(கொழும்பு)

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் மிகப்பெரியளவிலான நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு
### புவியியல் துறை பேராசிரியர் பிரதீபராஜா



(யாழ்ப்பாணம்)

மிகக் கிட்டிய காலத்தில் இலங்கை ஒரு மிகப்பெரியளவிலான நிலநடுக்க வாய்ப்பை கொண்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எண்ணற்ற உயிர்களை பலியெடுக்கின்ற

15ஆம் பக்கம் பார்க்க

### திடீர் சுகவீனம்
## வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

திடீர் சுகவீனம் காரணமாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினரான இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அகி என அழைக்கப்படும் தமிழ் மக்கள் கூட்ட

15ஆம் பக்கம் பார்க்க

### கூடாரங்களை அகற்றியதால்
## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டக்களத்தில் பதற்றம்



15ஆம் பக்கம் பார்க்க

### இந்திய மீனவர்கள் அத்துமீறல்
## நெடுந்தீவு, நயினாதீவு, வடமராட்சி மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் நெடுந்தீவு, நயினாதீவு, வடமராட்சி மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுந்து நாசமாகியுள்ளன.

நெடுந்தீவு மீனவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மீன்பிடிக்காக நெடுந்தீவுக் கடற்பகுதியில் தமது வலைகளை விரித்து காத்திருந்தபோது, நெடுந்தீவு கடற்பரப்பினுள் பல படகுகளில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களால்

15ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறாது நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
முன்னைநாள் ஆசிரியை

திருமதி
**பவளமலர் தீபன்**



அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முன்னைநாள் அதிபர்கள்,
முன்னைநாள் ஆசிரியர்கள்
கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை

(6065)

## சேதமடைந்த ...

வட மாகாணத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் பார்வையிட்ட வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மக்களின் இயல்பு வாழ்க்கையை விரைவாக மீட்டெடுக்கும் வகையில் சேதமடைந்த வீதிகளைத் தற்காலிகமாகவேனும் உடனடியாகச் சீரமைக்குமாறு விடுத்த பணிப்புரைக்கு அமைவாகவே இந்தத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய அரச திணைக்களங்கள், இராணுவம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் பின்வரும் வீதிகள் மிகக் குறுகிய காலத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பண்ணை வீதி 40 மீற்றர் திருத்தப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை - கேப்பாப்பிலவு - புதுக்குடியிருப்பு வீதியில் 25 மீற்றர் திருத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பூவரசன் குளம் - செட்டிகுளம் வீதி 50 மீற்றர் திருத்தப்பட்டுள்ளது.

மாந்தைமேற்கில் மாந்தை பரப்புக் கடந்தான் வீதி 5 மீற்றர் திருத்தப்பட்டுள்ளது.

கட்டாடுவயல் - இராமயன் குளம் வீதி 500 மீற்றர் திருத்தப்பட்டுள்ளது. மகிழங் குளம் - பள்ளமடு வீதி 40 மீற்றர் திருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

**வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.**

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(C-4494)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## சந்தைகள், கோழிஇறைச்சி மற்றும் கருவாட்டுக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றிற்கு 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- 2025.12.05 - 2025.12.12 பிற்பகல் 03.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | :- 2025.12 .15 மு.ப 10.00 மணி வரை |
| கேள்விதிறக்கும் திகதி | :- 2025.12.15 மு.ப 10.00 மணி |
| கேள்வி பத்திரம் திறக்கும் இடம் | :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட இரு பிரதிகளையும் தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு 15.12.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டையையும்** அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2025 டிசம்பர் 22 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
7. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
8. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும். பொதுசுகாதார பரிசோதகரது அறிவுறுத்தலை கடைப்பிடித்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
9. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யும் 5' நீளம் கொண்ட முகப்புக்கு ரூபா 125.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X3') ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக்கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
10. பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிடமுடியாது.
11. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும்.
12. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக்காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மீன் சந்தை- 3,000.00, சத்தியக்காட்டுச்சந்தை கருவாட்டுக்கடை 750.00
13. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
15. மூளாய் சந்தையினை குத்தகைக்கு எடுப்பவர் 01.01.2026 முதல் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு குறித்த சந்தையின் மீன்வியாபாரிகளிடமிருந்து இவ் விளம்பரத்தின் பிரகாரம் கட்டணத்தை அறவிடமுடியும். கோழி இறைச்சிக் கடையை தமது செலவில் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கு அமைவாக அமைத்து கோழி இறைச்சியினை விற்பனை செய்ய முடியும்.
16. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
17. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

### சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை – 2026

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானை மீன் சந்தை | | 4,075,500.00 | 81,510.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 94,415.75 | 1,890.00 | 1,000.00 |
| 03 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| | சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1,300.00 | 66,618.75 | 1,332.00 | 1,000.00 |
| 02 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 49,690.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | மூளாய் மீன் சந்தை (கோழி இறைச்சி கடை உட்பட) | | 126,445.00 | 2,528.00 | 1,000.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | —— | 502,132.95 | 10,042.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | —— | 83,600.00 | 1,672.00 | 1,000.00 |

05.12.2025 (C-4493)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் உதவிகள் இலங்கைக்கு அவசியம்

# ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

**(நியூயோர்க்)........................ இழப்புக்களுக்கும் மீட்சிக்கும் இடைப்பட்ட இத்தருணத்தில் ஒருமைப்பாடும், பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான தொடர் உதவிகள் மற்றும் ஆதரவு இன்றியமையாததாகும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

"டித்வா" சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் உள் ளிட்ட பல்வேறு தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் நிலைவரம் தொடர்பில் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

"டித்வா" சூறாவளியின் விளைவாகக் கடந்த வெள்ளிக்கிழமை மிகமோசமான மண்சரிவு மற்றும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப் பெருக்கு என்பன பதிவான நிலையில், நாம் இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட மிகமோசமான வெள்ளப் பெருக்காக அண்மைய அனர்த்தம் கருதப்படுகிறது.

இவ்வனர்த்தத்தினால் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தும் காணாமல்போயும் இருப்பதுடன் இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்கள் மற்றும் வாழ்வாதாரத்தை இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கையின் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் மிக நெருக்கமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியுள்ளது.


அதற்கமைய கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஊடாக உள்நாட்டு மனிதாபிமான உதவிக்குழு ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதுடன் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் கிளை அலுவலகத்தின் அனுசரணையுடன் கூட்டு உதவித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

அத்தோடு உணவு, தூய குடிநீர், சுகாதார மற்றும் தங்குமிட வசதிகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு அவசியமான பொருட்கள் உள்ளிட்ட உடனடி அத்தியாவசியத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவான வகையில் கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் துரிதமாக இயங்கிவருகிறது. அதுமாத்திரமன்றி ஐ.நா அலுவலகம் இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் இணைந்து உதவிகள் தேவைப்படுவோரை அடையாளங்காண் பதற்கான கூட்டு மதிப்பாய்வையும் முன்னெடுத்துள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்-அன்ட்ரூ பிரான்சே, "தற்போதைய அனர்த்த சூழ்நிலைக்கு மத்தியில் இலங்கையர்கள் ஒருவருக்கொருவர் மிதமிஞ்சிய கருணையைக் காண்பித்துள்ளனர்.

இழப்புக்களுக்கும் மீட்சிக்கும் இடைப்பட்ட இத்தருணத்தில் ஒருமைப்பாடும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான தொடர் உதவிகள் மற்றும் ஆதரவுமே நாட்டுக்கு இன்றியமையாததாகும். எனவே பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீட்சியை நோக்கிப் பயணிப்பதற்கு நாமனைவரும் ஒன்றிணைந்து உதவமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 - 09 - 1924 |  | 04 - 12 - 2025 |

### அம்பலவாணர் கதிர்காமத்தம்பி

**(ஓய்வுபெற்ற பிரதம நேரக் கணிப்பாளர் – CTK, சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)**

யாழ். கருகம்பனையை பிறப்பிடமாகவும் 7ம் கட்டை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கதிர்காமத்தம்பி அவர்கள் நேற்று 04.12.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புத்திரனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும் சண்முகவசீகரி - யசோ, சண்முகவதனி - றூபா(கொழும்பு), காலஞ்சென்ற சண்முகவதனன்(கனடா), சண்முகவசீகரன்(சந்நிதியான் மோட்டேர்ஸ், நெல்லியடி), பங்கஜம் -சியா(இளைப்பாறிய ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி), சண்முகாநந்தன்(லண்டன்), சண்முகேஸ்வரி - மீரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வானந்தன்(மருந்தாளர்), ஸ்ரீலகுமார், வசந்தாதேவி(கனடா), விஜிதா(ஆசிரியை - புலோலி MMTMS), பாலகிருஷ்ணா, சாந்தினி(லண்டன்), சபேசன்(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சிம்மகி(விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்) - சுரேந்திரன் (கணக்காளர் - ESPN), நிரோசனா (ஆசிரியை - யா/மகாஜனக் கல்லூரி) - மருதாசலன்(கிராம சேவையாளர், மாவிட்டபுரம்), திவிகரா - சதீஸ்குமரன்(கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை), இராகுலன் - அக்ஷனா(கனடா), இராகவன்(கனடா), டிலக்சனா (மருத்துவர்), வித்தியா (கொழும்பு பல்கலைக்கழகம்), தர்சிகா (பேராதனைப் பல்கலைக்கழகம்), கிருத்திகா, கரிஷ்ணா(லண்டன்), திருவேங்கதன் (லண்டன்), தாட்சாயினி, றமணன்(சம்பத் வங்கி, வவுனியா) - ருஷானி (MAS holding), மகாசக்தி (லண்டன்), சாமுகி(லண்டன்), சாயீசன் (லண்டன்), சாம்பவி(லண்டன்) ஆகியோரின் பேரனும் ஜித்தேஷ், ருபேஷ், பிரதுக்ஷா, ஸ்ரீகரி, வேய்ங்குழலி, ஆதிக்கா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.12.2025 வெள்ளிக்கிழமை மதியம் 2 மணிக்கு 7 ம் கட்டை மல்லாகத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்

077 0790 395 (சியா)
077 5872 366 (யசோ)

(C-4495)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் குலசிங்கம்



வேலணை 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.9, பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதி, திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் குலசிங்கம் அவர்கள் கடந்த (03.12.2025) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவ பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நீலாயதாட்சி அவர்களின் அன்புக் கணவரும் வெங்கடேஷ் (முகாமையாளர் - மக்கள் வங்கி, சாவகச்சேரி), லிங்கேஷ் (U.S.A), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம், நரேன்பிட்டிய) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஷாமினி, வினுஜா (U.S.A), வாகீசன் (தூதுவராலயம் - அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகரன், அபூர்வா, கோவினேஷ் (U.S.A), விக்னேஷ்கார்த்தி (U.S.A), சீர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சோமசேகரம், தவமணி, சேனாதிராஜா, கிருஷ்ணபிள்ளை மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, சாம்பசிவம் மற்றும் சத்தியவதி, நித்தியலக்சுமி, சிவலிங்கம், சரோஜினிதேவி (ராசா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் யோகாம்பிகை (அம்பிகா), காலஞ்சென்ற கதிரமலைநாதன் (முருகன்) மற்றும் பத்மராஜன் (பழனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் இந்திராணி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் இராஜலக்சுமி (ராணி) மற்றும் காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம்(பால்ப்பண்ணை) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.09, பழங்கிணற்றடி,
பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
வெங்கடேஷ் (மகன்) - 076 438 0304
லிங்கேஷ் (மகன்) - 00131 22829305
சிவசக்தி (மகள்) - 077 615 1170

(6068ā)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்

## எந்த ஒரு காரியத்தையும் விடாமுயற்சியுடன் செய்யும் மிதுன இராசியினரே!



கிரகநிலை- தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி, ராகு - தொழில் ஸ்தானத்தில் சந்திரன் - என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எந்த ஒரு காரியத் தையும் விடா முயற்சியுடன் செய் யும் மிதுன ராசியினரே இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். ஆரோக்கியம் சம் பந்தமான வீண் மனக் கவலை உண்டாகும். எதிர் பாராத செலவு ஏற்படும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். பண வரவு இருக்கும். வாக்குவன்மை யால் காரிய அனுகூலம் ஏற்படும்.

தொழில், வியாபாரத்தில் எதிர் பாராத போட்டிகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை. பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் வீண் அலைச்சலை சந்தி க்க வேண்டி இருக்கும். குடும்பத் தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல் லது. பெண்களுக்கு வீண் அலைச் சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்ப டும். வாக்கு வன்மையால் அனு கூலம் உண்டாகும்.

அரசியல்வாதிகள், தொண்டர்க ளின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். கலைத்துறை யினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோ




பித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவு அமோகமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். மாணவர் களுக்கு கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்ல மதிப் பெண் பெற உதவும். எந்த காரியத் தையும் யோசித்து செய்வது நல்லது.

**மிருக சிரீஷம் 3, 4 பாதங்க ள்:** இந்த மாதம் பழகும் மனித ர்களின் வார்த்தைகளை நம்புவதா வேண்டாமா என்று சமயத்தில் சந்தேகம் ஏற்படலாம். சனி சஞ்சா ரத்தால் வாழ்க்கையில் பிடிப்பும் ஆர்வமும் இல்லாமல் சலிப்பை உண்டாக்கினாலும், ராசிநாதன் பலத்தால் பாதிப்பை உண்டாக் காமல் காப்பாற்றி வருவார். இனிப்பும் கசப்பும் மாறிமாறி இருக்கும்.

**திருவாதிரை:** இந்த மாதம் குடும்பத்தில் நிலவி வந்த பிரச்சி னைகள் மறையும். சிலருக்கு திரு மணம் மற்றும் சுப நிகழ்ச்சிகள் நடப்பதில் தாமதம் ஏற்படும். யாருக் கும் வாக்கு கொடுக்கும் முன் ஆலோ சனைகள் செய்து கொள்ளவும்.

**புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பொருட் களை களவு கொடுக்க நேரிடலாம். உங்களின் உடைமைகள் மீது கண்ணும், கருத்துமாக இருக்க வேண்டும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அறிமுகம் இல்லாதவர்களின் வீட்டில் எதையும் உட்கொள்ள வேண்டாம்.

**பரிகாரம்:** பெருமாளை துளசி யால் அர்ச்சனை செய்து நெய் தீபம் ஏற்றி வணங்க கஷ்டங்கள் குறை யும். காரிய வெற்றியும், நன்மை யும் உண்டாகும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 22, 23, 24

**அதிஷ்ட தினங்கள்:** 15, 16, 17

## எல்லோரிடமும் அன்பாக பழகும் கடக இராசியினரே!



கிரகநிலை- ராசியில் குரு (வ) - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - சுக ஸ்தானத்தில் புதன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி, ராகு - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் - என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** வாக்கு திறமையும் எளிதில் கோபம் அடையாத குண மும் கொண்ட கடக ராசியினரே இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக் கும்.

சுய நம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும். மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்க பெறலாம்.

தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்க பெறும். வேலை தேடி கொண்டு இருப் பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் தலை தூக்கச் செய்யும். எனவே சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களை பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

பெண்களுக்கு எந்த ஒரு விவ காரத்தையும் எதிர் கொள்ளும் மன வலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். கட்சித் தலைமையிடம் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும். சச்சரவுகளில் சம்பந்தப்பட்டு மாட்டிக் கொள்ள வேண்டாம். கலைத் துறையினர் கடினமாக உழைத் தால்தான் துறையில் வெற்றி வாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்




திற்குள் முடித்து விடுவீர்கள். உங்கள் திறமைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். சக கலை ஞர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான சிக்கல்கள் குறையும். எதிர்பார்த்த மதிப்பெண் பெற அதிக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் நீங்கள் அமைதியாக இருந்தாலும் வீண் சண்டைகள் மற்றும் வீணான குழப்பங்கள் தேடி வர வாய்ப்பு இருக்கிறது. தகுந்த வரன் கிடைத்து திருமண ஏற்பாடு இனிதே நடந்தேறும். வீடு, நிலம் மற்றும் வாகனங்கள் வாங்கலாம்.

**பூசம்:** இந்த மாதம் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். ஆனாலும் கவனமுடன் நடந்து கொள்ளுங்கள். போட்டித் தேர்வுகள் சாதகமாக அமையும். சிலர் கல்வி பயில வெளியூருக்கு செல்ல வேண்டி வரும்.

**ஆயில்யம்:** இந்த மாதம் நல்ல பெயர் வாங்குவீர்கள். மூலதனத்திற்குத் தேவையான பணம் வந்து குவியும். எதிரிகள் வகையில் சற்று கவனமுடன் செயற்படவும். அதனை சரியாக பயன்படுத்திக் கொள்ளவும்.

**பரிகாரம்:** திங்கட்கிழமையில் அம்மனுக்கு மல்லிகை மலரை அர்ப்பணித்து தீபம் ஏற்றி வணங்க மனகவலை தீரும். எதிர்ப்புகள் அகலும். எல்லாவற்றி லும் நன்மை உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26

**அதிஷ்ட தினங்கள்:** 18, 19

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டித்வா புயல் தாக்கத்தினால்

## 3 நாட்களில் 215 கடுமையான மண்சரிவுகள்



(கொழும்பு)

இலங்கையை டித்வா புயல் தாக்கிய மூன்று நாட்களில் சுமார் 215 கடுமையான மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளிலேயே இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

குறித்த காலப்பகுதியில் பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இந்த மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இதனிடையே, சில தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்கள் முற்றிலும் அழிவடைந்துள்ளதாகவும், அவற்றுக்கு அணுகல் வீதிகள் இல்லை எனவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த இடங்களைச் சீரமைப்பதற்கு கணிசமான காலம் தேவையென அவர் குறிப்பிட்டுள்ளார். வான்வழி படங்கள் மூலம் சிறிய நிலச்சரிவுகளை அடையாளம் காண்பது கடினமானது.

இந்த நிலையில், பல்வேறு இடங்களைக் கண்காணிப்பதற்கு 55 பேர் கொண்ட குழு நியமித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)


எம் இனிய உறவுகளே வணக்கம்,

**யாழ் விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சி நிதிக்காக உற்சவகால அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு**



இற்றைக்கு 49 ஆண்டுகளுக்கு மேலாக உங்களின் நிதிப் பங்களிப்போடு இயங்கி வருகின்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் ஆண்டுதோறும் பார்வையற்றவர்களின் பன்முகப்பணிகளுக்காக முன்னெடுத்து வருகின்ற உற்சவகால அதிஸ்ட இலாப செயற்றிட்டத்தினை இந்த ஆண்டும் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையோடும் மனிதநேயமுள்ள தங்களின் உதவியோடும் எமது பொதுச்சபை உறுப்பினர்களின் பங்களிப்போடும் முன்னெடுத்திருந்தோம். அதன் வெற்றியாளர் தெரிவை நாம் 03.12.2025 அன்று எமது பிரதான அலுவலகத்தில் நடாத்தினோம். அத் தெரிவில் 1ஆம் பரிசான Lumala Bicycle இனைப் பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக - 10735 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 2ஆவது பரிசான 32" Tele Sonic தொலைக்காட்சியினைப் பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக - 08347 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 3ஆவது பரிசான Gas Cooker (Nipon) பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக - 09016 தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கும் நாம் அதிஸ்டசாலிகளுக்கு வாழ்த்துக்களையும் எம் மீது அக்கறை கொண்ட அனைத்து நண்பர்களுக்கு எமது அன்பையும் பரிமாறி மகிழ்கிறோம்.

வெற்றியாளர்களே உங்கள் பரிசுகளை 31.12.2025 இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் காலை 09.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரையுள்ள நேரத்துக்குள் தங்களது அதிஸ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். 31.12.2025 இற்குப் பின்னர் தங்களால் பெற்றுக்கொள்ளப்படாத பரிசில்கள் எமது நிறுவனத்திற்கே சொந்தமானது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம். உறவுகளே அடுத்த ஆண்டும் எமது சமூகப்பணிக்கான இச் செயற்றிட்டத்தில் அன்போடும் அக்கறையோடும் பங்களிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். (6064)



**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமுகவள நிலையம்**
**அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்-2025**

முதலாம் பரிசு இலக்கம்:- 22466
இரண்டாம் பரிசு இலக்கம்:- 13204
மூன்றாம் பரிசு இலக்கம்:-10110
ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | |
|---|---|
| 1) 7985 | 2)17520 |
| 3) 24254 | 4) 9139 |
| 5) 1209 | 6)16323 |
| 7)13810 | 8) 15127 |
| 9) 3606 | 10) 1061 |

வெற்றியாளர்கள் பரிசுகளினைக் கருவி நிறுவனத்தின் அலுவலகத்தில் எதிர்வரும் 08/12/2025 திங்கட்கிழமை அன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

**பருத்தித்துறை வீதி,**
**3 ஆம் கட்டை,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**
**தொ.இல:-021 205 4224, 076 551 5755** (C-4489)



**சாவகச்சேரி பிரதேச சபை**
**படவரைஞர்களை பதிவு செய்தல்/ புதுப்பித்தல் - 2026**

எமது சபையினால் 2026 ஆண்டு சாவகச்சேரி பிரதேசசபையில் கட்டட அனுமதிக்களுக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்தில் கொண்டு, உரிய ஆவணங்களுடன் 26.12.2025ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தை செலுத்தி சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமைப்பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**கல்வித்தகைமை:**- NVQ-Level - 5 in Drafting Technology (Buildings), கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள், அல்லது NVQ-Level 5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்பவர்கள் அதற்குரிய சிபாரிசுக் கடிதத்துடன் விண்ணப்பிக்க முடியும்.

- விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி: 05.12.2025 தொடக்கம் 26.12.2025
- அலுவலக நாட்கள் : மு.ப 9.00 - பி.ப 3.00 மணிவரை
- விண்ணப்பபடிவம் ஏற்கும் இறுதித் திகதி : 26.12.2025 -12.00 மணிவரை

❖ மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள், நிபந்தனைகளை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.பொன்னையா குகதாசன்,**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை.** (C-4488)



**மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்**
**கேள்வி அறிவித்தல்**

பின்வரும் நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை.

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா. 100.00ம் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா.10000.00ம் செலுத்தி 19.12.2025ம் திகதி பி.ப 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 19.12.2025 பி.ப 3.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 4.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பமிடப்பட்டுள்ளது
மேல்நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். (C-4486)



**நல்லூர் பிரதேச சபையின்**
**2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்**

நல்லூர் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரைபு வரவுசெலவுத்திட்டம் "1987 ஆம் ஆண்டு பிரதேசசபைகள் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய" தயாரிக்கப்பட்டு 05.12.2025 தொடக்கம் 11.12.2025 ஆம் திகதி வரை எமது தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், பொது நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன், இதனை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.** (C-4487)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டச் செயலகம்
# வழங்குநர்களை முகாமை செய்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலகங்கள் என்பவற்றிற்கு கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள், வேலைகள் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து முகாமை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

**a.Supply Categories**

| S.No | Supplies | Categories | | | Non Refundable Fees Rs. |
|---|---|---|---|---|---|
| | | Sectors | Items | Code | |
| 01 | Goods – Capital | 10 | 70 | GCA to GCJ | Rs.100/- (for each item) |
| 02 | Goods – General | 08 | 37 | GGA to GGH | Rs.100/- (for each item) |
| 03 | Services | 05 | 38 | SVA to SVE | Rs.100/- (for each item) |
| 04 | Works | 04 | 32 | WKA to WKD | Rs.5000/- |

**b.Supply Details**

**1.Goods- capital**

**GCA.Agricultural Items**
GCA01. Agriculture Equipment, Tools
GCA02. Fertilizers
GCA03. Seeds, Seeding, Saplings
GCA04. Poly Sack Bags
GCA05. Animals for Self-Employment (chicks, cows, goats)

**GCB. Contract Materials**
GGB01. Aluminum Partition, Fitting
GCB02. Cement
GCB03. Gravel Sand
GCB04. Hard Ware Items
GCB05. Paints
GCB06. Plumping Goods
GCB07. Roofing Materials
GCB08. Random Rubble for Rip Rap
GCB09. River Sand
GCB10. Silt soil
GCB11. Stones
GCB12. Tiles & Marbles
GCB13. Timber
GCB14. Water Tanks

**GCC. Machineries, Spare Parts**
GCC01. Equipment for Aluminum Fitting, Glass, Ply wood, MDF
GCC02. Equipment for Welding Works
GCC03. Equipment for Carpenter Works
GCC04. Equipment for Masonry Works
GCC05. Generator, Spare Parts
GCC06. Water Pump, Spare Parts
GCC07. Other Machineries, Spare parts

**GCD. Medical Equipment**
GCD01. Baby Needs
GCD02. Furniture for Medical
GCD03. Medical Equipment
GCD04. Medical Drugs
GCD05. Pharmaceuticals Products
GCD06. Other Medical Products

**GCE. Solar Systems**
GCE01. Solar Systems, Spare Parts.
GCE02. Solar On Grid, Off Grid System
GCE03. Solar Systems

**GCF. Fishing Equipment**
GCF01. Boat Engine, Tools, Spare Parts
GCF02. Fishing Boat
GCF03. Fishing Net, Rope, Twine
GCF04. Other Fishing Relative Goods

**GCG. Furniture**
GCG 01. Chairs Knitting
GCG02. Mattress, Covers
GCG03. M.D.F Furniture
GCG04. Plastic Furniture
GCG05. Steel Furniture
GCG06. Wood Furniture

**GCH. Water Filter**
GCH01. Water Filter, Spare Parts

**GCI. Electrical Equipment**
GCI01. Air Conditioner
GCI02. Electric Goods for Home
GCI03. Electric Goods for Office
GCI04. Electric Motor Pump
GCI05. Freezer
GCI06. Goods for Electrical Connection
GCI07. P.V.C Pipe Varieties
GCI08. Sound, Light Equipment
GCI09. Sewing Machine
GCI10. Transformer
GCI11. T.V, Mic, Speakers, etc

**GGJ. Electronic Items**
GGJ01. Alarm Solution
GGJ02. CCTV
GGJ03. Camera and Equipment
GGJ04. Desk Tops Computer, Lap Tops, Spare Parts
GGJ05. Fax
GGJ06. Intercom System
GGJ07. Multi Media Projector, Smart board
GGJ08. Network Services
GGJ09. Printer
GGJ10. Photo Copier, Spare Parts
GGJ11. Roneo Machine
GGJ12. Toner, Ribbon, Ink Cartridge
GGJ13. Video Recorder

**2.Goods- General**

**GGA.Cloth Items**
GGA01. Bed sheets, Pillow, Pillow Covers
GGA02. Curtains
GGA03. Dresses for Men, Women
GGA04. Other Type of Cloths
GGA05. Table Cloth, Golden Cloth, Carpets
GGA06. Uniform, Uniform Materials
GGA07. Foot Wares, Rain Coats

**GGB. Consumable Items**
GGB01. Cleaning Equipment
GGB02. Cleaning Items
GGB03. Other consumable Items

**GGC. Fancy Goods**
GGC01. Fancy Items.
GGC02. Foot Wear
GGC03. Home Usage Product
GGC04. Leather Goods

**GGD. Food Items**
GGD01. Biscuits
GGD02. Cereal Products
GGD03. Locally Product Food Item
GGD04. Milk Powder, Disposable Cups
GGD05. Non-Vegetarian (Break Fast, Lunch, Dinner)
GGD06. Short Eats
GGD07. Soft Drinks
GGD08. Vegetarian (Break Fast, Lunch, Dinner)
GGD09. Water Bottles

**GGE. Sports Items**
GGE01. Equipment for Gymnasium
GGE02. Musical Instrument
GGE03. Prizes for Winners

**GGF. Stationeries**
GGF001. School Bags
GGFO02. Stationeries office

**GGG. Vehicle Relative Goods**
GGG01. Vehicle batteries, spare parts
GGG02. Vehicle Tires, tubes
GGG03. Other Vehicle spare parts

**GGH. Grocery Items**
GGH01. Cereals and Pulses
GGH02. Rice and Flour
GGH03. Wheat Flour
GGH04. Coconut oil and Vegetables

**3. Services**

**SVA. Contract Equipment Hiring**
SVA01. 3 Cube Tipper
SVA02. D2 Dozer
SVA03. D3 Dozer
SVA04. PC30 Excavator
SVA05. 10 Ton Pad Foot Roller
SVA06. 15 Ton Pad Foot Roller

**SVB. Printing**
SVB01. Banner Printing
SVB02. Book Binding
SVB03. Office ID
SVB04. Office Files
SVB05. Plastic Name Board
SVB06. Rubber Stamp, Date Stamp
SVB07. Screen Printing, Off-set Printing, Digital Printing

**SVC. Vehicles**
SVC01. Vehicle Maintenance, Service
SVC02. Vehicle Lease, Rent
SVC03. Vehicle Tinkering
SVC04. Vehicle Mechanical
SVC05. Vehicle Interior, Upholstery
SVC06. Vehicle Air Condition
SVC07. Vehicle Insurance

**SVD. Event Management Services**
SVD01. Panthal Service
SVD02. Sound & Light, Power supply Service
SVD03. Drama
SVD04. Music event
SVD05. Western dance and Classical dances
SVD06. Thavil and Nadaswaram

**SVE. Virtual Services**
SVE01. Cleaning Services
SVE02. Electronic Items Maintenance on Spare Parts Repair
SVE03. Electrical Items Maintenance on Spare Parts Repair
SVE04. Furniture Maintenance, Repair
SVE05. Machineries Maintenance, Repair
SVE06. Photo Copier Maintenance, Repair
SVE07. Computer Maintenance, Repair
SVE08. Printers Maintenance, Repair
SVE09. Intercom, CCTV Maintenance, Repair
SVE10. Refrigerator, Air conditioner Maintenance, Repair
SVE11. Security Service
SVE12. Software Developing
SVE13. Lift Services

(7 ஆம் பக்கம் பார்க்க)

# போலி செய்திகள் 57 முறைப்பாடுகள்

(கொழும்பு)

அவசரகாலத்தில் பொது மக்களிடையே குழப்பத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் வகையில், சமூக ஊடகங்களில் முறையற்ற வகையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை பதி விடப்பட்டமை தொடர்பில் இதுவரை 57 முறைபாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பில் கணனி குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனாதிபதியால் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சமூக ஊடகங்களில் ஒரு சில முறைகேடான மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பதிவிட்டு வருகின்றனர். இதனால் மக்கள் குழப்பத்துக்கு ஆளாகியும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

மேற்படி குற்றச்செயலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவு விரிவான விசாரணையை முன்னெடுத்துள்ளது.

மக்களுக்கு அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில் செய்திகளைப் பரப்பும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 6 ஆம் பக்கத் தொடர்ச்சி )

**4.Works**

**WKA. Contractors**
WKA01. Building
WKA02 Highway
WKA03. Bridges
WKA04. Water Supply and Sewerage
WKA05. Irrigation, Drainage Canal
WKA06. Dredging, Reclamation
WKA07. Storm Water Disposal, Land Drainage
WKA08. Maritime Construction
WKA09. Heavy Construction

**WKB. Electrical & Mechanical Services (EM)**
WKB01. Electrical Installation (Low Voltage)
WKB02. Electrical Installation (Medium Voltage)
WKB03. Elevators, Escalators & Travellators
WKB04. Extra Low Voltage Installation
WKB05. Fire Detection, Protection & Suppression
WKB06. Generators
WKB07. Heavy Steel Fabrications
WKB08. LP Gas Systems
WKB09. Mechanical Ventilation and Air Conditioning
WKB10. Medical Gas Systems
WKB11. Plumbing & Drainage
WKB12. Refrigeration

**WKC. Specialized Construction Contractors (SP-C)**
WKC01. Carpentry & Joinery
WKC 02. Floor, Wall & Ceiling Finishes
WKC 03. Furniture, Fittings & Equipment's
WKC 04. Landscaping
WKC05. Light Metal Work
WKC06. Aluminium & Finishes
WKC07. Soil Nailing & Stabilization
WKC08. Swimming Pools (Industrial & Domestic)
WKC 09. Water Proofing

**WKD. Piling construction contractors (GP-P & GP-B)**
WKD01. Geotechnical Piling - Precast
WKD02. Geotechnical Piling - Bored Cast In-situ

பதிவுசெய்யவிரும்புபவர்கள் இணையத்தளத்தின் மூலம் நிகழ்நிலை (Online) விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி நிகழ்நிலையூடாகவும் நிகழ்நிலையூடாக சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியை தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி-** http://www.kilinochchi.dist.gov.lk/index.php/en/supplier-registration.html
தொலைபேசி&தொலைநகல்: - 0212285352, மின் அஞ்சல்-dskiliprocurement@gmail.com
வலைத்தளம்- http://www.kilinochchi.dist.gov.lk

(C-4490)

# கற்சிலைமடு பாலம் உடைவு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கற்சிலைமடு பேராறுப் பகுதியில் அமைந்துள்ள பாலம் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புக் காரணமாக உடைவு ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த வீதியால் கனரக வாகனங்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. (8-299)

# பேராசிரியர் கைலாசபதியின் 43 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் ஆய்வுத் துறை முன்னோடி பேராசிரியர் க.கைலாசபதியின் 43 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம் என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் "காலங்கள் கடந்து நிலைத்து நிற்கும் பேராசிரியர் க.கைலாசபதியின் ஆய்வுகள் பற்றிய பார்வைகள்" என்ற தலைப்பில் பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடு தொடர்பாக தமிழ் ஆசிரியர் அ.முருகதாசன் உரையாற்றவுள்ளார்.

அத்துடன் அடியும் முடியும் பற்றி ஆய்வாளர் சி.விமலன், இரு மகாகவிகள் தொடர்பாக கவிஞர் மாதவி உமா சுதசர்மா ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் சபையோர் கலந்துரையாடலும் இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (8)

மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படும்

# குடிநீர் பாதுகாப்பானது பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பானது போலிச் செய்திகளை நம்ப வேண்டாம் என மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையால், மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மாசுபட்டுள்ளது என்ற பொய்யான செய்தி சமூக வலைத்தளங்களில் பரவிவருகின்றன.

இந்த தகவல் முழுவதும் வதந்தி என்பதை தெளிவாக அறிவிக்கிறோம்.

மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பான குழாய் கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது. இந்த நீர்மூலங்கள் மேற்பரப்பு வெள்ளத்தால் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

எங்களின் ஆய்வகப் பிரிவு தொடர்ச்சியாக நீர் தரத்தை பரிசோதித்து மன்னார் மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பானது மற்றும் குடிப்பதற்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது.

ஆகையால், பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம், வதந்திகளை நம்ப வேண்டாம். தேவையான எந்த அறிவிப்பும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (8-285)

வட்டுவாகல் பாலம்

# புனரமைப்பு பணி நிறைவு போக்குவரத்துக்கு அனுமதி

(நெளுக்குளம்)

வட்டுவாகல் பாலம் தற்காலிக புனரமைப்பு நிறைவு பெற்று அனைத்து வாகனங்களும் பயணிக்க வழி செய்யப்பட்டுள்ளது.

பரந்தன் புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு A35 வீதி இரண்டாக பிளவுபட்டிருந்ததால் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளதனை சீர் செய்யும் பணி இரவு பகலாக இடம்பெற்றிருந்தது.

அண்மைய நாட்களாக பெய்த கனமழையால் நீர்மட்டமானது உயர்வடைந்தமையால் பரந்தன் புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு A35 வீதி வட்டுவாகல் பாலம் இரு துண்டுகளாக பிளவடைந்து நீர் பாய்ந்திருந்தது. இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது.

எனவே தேவையின் நிமித்தம் முல்லைத்தீவிற்கு பயணம் செய்வோர் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வழியான மாற்று வழியினை பயன்படுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ



மையத்தினால் அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது.

இந் நிலையில் தொடர்ச்சியாக இரவு பகலாக வேலைகள் இடம்பெற்று வட்டுவாகல் பாலமூடான போக்குவரத்தினை மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. (8-299)

# மனிதாபிமான உதவிகள் வழங்க 70 நாடுகள் உறுதி

## அமைச்சர் அனுர கருணாதிலக்க

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலையைத் தொடர்ந்து கிட்டத்தட்ட எழுபது நாடுகள் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜேர்மனி, ஜப்பான், மாலைதீவுகள், நேபாளம் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ள நாடுகளில் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

200 மெட்ரிக் தொன் மனிதாபிமான உதவிப் பொருட்கள் கொண்ட கப்பல் ஒன்று விரைவில் இலங்கையை வந்தடையவுள்ளது.

இந்த நாடுகள் அவசர உதவிகளை மாத்திரம் அன்றி, எதிர்கால மீள்கட்டமைப்புச் செயற்முறைக்குத் தேவையான நிதியுதவி மற்றும் இயந்திரங்கள் போன்ற உதவிகளையும் வழங்கியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (8)

# வட இலங்கைச் சங்கீத சபை

**பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல்-2026**

வட இலங்கைச் சங்கீத சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தையும், அறிவுறுத்தல்களையும் 01.12.2025 தொடக்கம் www.ncomsjaffna.com எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து, அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டவாறு படிவத்தைப் பூர்த்தி செய்து உரிய கட்டணங்களைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்

விண்ணப்ப முடிவு திகதி -31.12.2025

**மாலதி முகுந்தன்**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை**
**மருதனார்மடம்- சுன்னாகம்.**

(C-4491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேல் வீரர்கள் மீதான தாக்குதலை பொறுத்துக் கொள்ள முடியாது

### எச்சரிக்கிறார் நெதன்யாகு



(காசா)

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் காசாவில் இரு குழந்தைகள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் வீரர்கள் மீதான தாக்குதலை ஒரு போதும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று அந்நாட்டு பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசாவை மையமாகக் கொண்ட ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர் இடையிலான போர் நடந்து வருகிறது.

2 ஆண்டுகளை கடந்துள்ள இந்தப் போரில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் தலையீட்டினால் இரு தரப்பின ரிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ஒப்பந்தத்தை மீறி செயற்பட்டதாகக்கூறி, ஹமாஸ் மீது இஸ்ரேல் அடிக்கடி தாக்குதலை நடத்தி வருகிறது.

இதனிடையே, ராபா பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மீது ஹமாஸ் அமைப்பினர் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில், 5 இராணுவ வீரர்கள் பலத்த காயமடைந்தனர்.

இந்த நிலையில், ஹமாஸின் தாக்குதலுக்கு பதிலடியாக, நேற்று முன்தினம் நள்ளிரவில் காசாவின் கான் யூனிஸ் பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. இதில், இரு குழந்தைகள், இரு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, எங்கள் படைகளுக்கு எதிராக பயங்கரவாதச் செயல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

எங்கள் கொள்கை தெளிவானது. இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்களைத் தாக்குவதை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம். அதற்கேற்ற பதிலடி இருக்கும்.

ராபாவில் நடந்த தாக்குதலில் காயமடைந்த நம் வீரர்களுக்கு விரைந்து குணமடைய வேண்டுகிறேன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். (நி)

## இஸ்ரே...

## 123 ந...

(ஜெனீவா...

சிரியாவி...

இஸ்ரேல் தொ...

வரும் ஆக்கிரம...

எனக்கூறி, அ...

காலி செய்ய வே...

தீர்மானம் ஐ...

நிறைவேற்றப்...

எகிப்து முன்வைத்த இந்த தீர்மானத்துக்கு 123 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

1967 ஆம் ஆண்டு

நடை... களுக்கு... இஸ்ரே... அப்பே... ருந்து...

## திரைப்பட தயாரிப்பாளர் AVM சரவணன் காலமானார்



(சென்னை)

ஏ.வி.எம். நிறுவனத்தின் உரிமையாளரும் முதுபெரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ஏ.வி.எம். சரவணன் காலமானார்.


ஏ.வி.எம் சரவணன் நேற்று வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் காலமானார்.

சிறிது காலமாக வயது மூப்பினால் ஏற்படும் உடல்நலப் பிரச்சினை காரணமாக சிகிச்சை பெற்று வந்த ஏ.வி.எம் சரவணன் தனது 86 வயதில் காலமானார்.

இவரது மறைவு திரையுலகினர் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏவி மெய்யப்ப செட்டியாருக்கு பின்னர் அந்த நிறுவனத்தை அவரது மகனான ஏ.வி.எம் சரவணன் நிர்வகித்து வந்தார்.

"பராசக்தி", "களத்தூர் கண்ணம்மா", "சர்வர் சுந்தரம்", "முரட்டுக்காளை" "நானும் ஒரு பெண்", "சம்சாரம் அது மின்சாரம்", "சிவாஜி", "வேட்டைக்காரன்", "மின்சாரக் கனவு", "அயன்" உள்ளிட்ட பல வெற்றிப் படங்களை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




## போரால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் 54 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம்



(காசா)

பாலஸ்தீனத்தில் கட்டட இடிபாடுகளுக்கு நடுவே மேடை அமைக்கப்பட்டு, ஒரே நேரத்தில் 54 ஜோடிகளுக்கு உற்சாகமாக திருமணம் நடைபெற்றது.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடித் தாக்குதல் நடத்தியது.

அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது.

2 ஆண்டுகள் நடந்த போரில் காசாவில் 70 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

இந்தப் போரால் காசா முழுவதுமாக உருக்குலைந்து போனது. இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுக்காக தவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

காசாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி

சூ... போ... இ... தெ... மு... 10... இ... லு... க... உ... வி... ப... செ... பா... தே... தி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரேலுக்கு எதிரான தீர்மானத்துக்கு
# நாடுகள் ஆதரவாக வாக்களிப்பு

**ீவா)**

**ாவின் கோலன் மலைப்பகுதி மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு ரமிப்பைச் சட்டவிரோதமானது அந்தப் பகுதியை உடனடியாக வேண்டும் என்று வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் சபையில் றப்பட்டது.**



நடைபெற்ற அரபு நாடு களுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றி பெற்றது. அப்போது ஜோர்டானிடமி ருந்து கிழக்கு ஜெருசலேம், சிரியாவிலிருந்து கோலன் ஹைட்ஸ் மற்றும் எகிப்திடமிருந்து காசா பகுதி மற்றும் சினாய் தீபகற்பம் உள்ளிட்ட மேற்குக் கரையை இஸ்ரேல் கைப் பற்றியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நா சபைக் கூட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிராக எகிப்து தீர்மானம் கொண்டுவந்தது.

அந்த தீர்மானத்தில், "சிரியாவின் கோலன் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்து இருப்பதைச் சட்ட விரோதம் என்றும், அப்பகுதியை விட்டு அந்நாடு வெளியேற வேண்டும்" என்று எகிப்து கோரியிருந்தது. எகிப்து கொண்டுவந்த இந்த தீர்மானத்துக்கு இந்தியா உள்ளிட்ட 123 நாடுகள் ஆதரவு தெரிவித்த நிலையில் 7 நாடுகள் எதிர்ப்பும் 43 நாடுகள் புறக்கணிப்பும் செய்தது.

இதன் முடிவில் இந்த தீர்மானம் ஐ.நா சபையில் நிறைவேறியது. அடுத்து தங்களுக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு சிரியா நன்றி தெரிவித்தது. (நி)

---

சூழலை கருத்தில் கொண்டு போரை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேலுக்கு சர்வதேச நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் முயற்சியால் கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி இஸ்ரேல், ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து, காசா மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்க ஐ.நா சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், போரால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் 54 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்ற சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காசாவின் கான் யூனிஸ் பகுதியில், வெடிகுண்டு தாக்குதல்களால் சேதமடைந்த கட்டட இடிபாடுகளுக்கு நடுவே மேடை அமைக்கப்பட்டு, ஒரே நேரத்தில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 54 ஜோடிகளுக்கு உற்சாகமாகத் திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் தங்கள் கையில் பாலஸ்தீன கொடிகளை ஏந்தியிருந்தனர்.

அங்கு திரண்டு வந்திருந்த பொதுமக்கள் திருமண ஜோடிகளை வாழ்த்தி மகிழ்ந்தனர். (நி)



---

## ஆப்கானில் கொலைக் குற்றவாளிக்கு
## மரண தண்டனை நிறைவேற்றிய சிறுவன்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து உள்ளனர். இந்த நிலையில் அந்நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள கோஸ்ட் நகரில் கொலை குற்றவாளிக்கு அங்குள்ள மைதானத்தில் 80 ஆயிரம் பேர் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 10 மாதங்களுக்கு முன் ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 குழந்தைகள் உட்பட 13 பேரை கொன்ற வழக்கில் அந்நாட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.


இதையடுத்து மங்கலுக்கு பொதுவெளியில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த 13 வயது சிறுவன் மூலம் கொலையாளியை துப்பாக்கியால் சுட்டு இந்த மரண தண்டனையை தலிபான்கள் நிறைவேற்றி உள்ளனர்.

மரண தண்டனையை நிறைவேற்றும் போது யாரும் வீடியோ கேமரா வசதி செல்போன்களை பயன்படுத்தக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் பலர் மரண தண்டனையை செல்போனில் வீடியோ எடுத்தனர்.

இது சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. கடந்த 2021 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி அமைந்த பிறகு பொதுமக்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும் 11ஆவது மரண தண்டனை இதுவாகும். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிரந்தர தீர்வு

## ஜனாதிபதி வலியுறுத்தல்

**(கொழும்பு) ---------------------**

**சீரற்ற காலநிலை காரணமாக முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை உரிய முறைமையின்படி அடையாளம் காணுமாறு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று பணிப்புரை விடுத்தார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கும், நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காகத் தேவையான துல்லியமான தரவுகளைத் திறம்படப் பெறுவதற்கான விசேட பொறிமுறையை உருவாக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இதுவரை நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளின் படி, மண்சரிவுகளினால் 1,289 வீடுகள் முழுமையாகவும், 44,574 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

மேலும், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்கள் மீண்டும் அனர்த்தங்களில் பாதிக்கப்படாமல் இருக்க நீண்டகால தீர்வை வழங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா: 19
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L,அச்சகம்(own)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16277

பிறப்பு: 1991 - இந்து
நட்சத்திரம்: பூசம்
கி-பா:32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC,Sevice Engineer
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16278

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L, Technician
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16279

பிறப்பு :1994 - இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல்செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Bsc, Manager (London)
எதிர்பார்ப்பு - படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16280

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 39 1/2
உயரம்:6'
தகைமை/தொழில்-Degree, UK
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16281

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 37
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor.
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15014

பிறப்பு -1992-இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS, Doctor.
எதிர்பார்ப்பு : Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15015

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு-1997-RC
நட்சத்திரம்- சித்திரை
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15915

பிறப்பு-1988 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா-37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher (Australia)
எதிர்பார்ப்பு - பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: G/15003

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 495



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புகழ்ச்சி – ஒரு மருந்து!

ஒரு பள்ளிக்கூடத்துக் குழந்தைகளிடம் விஞ்ஞானப் பூர்வமாக ஒரு சோதனை நடத்திப் பார்த்திருக்கிறார்கள்!

அதாவது அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார்கள். பரீட்சை வைப்பதற்கு முன்பு அவர்களைப் பார்த்து நீங்கள் எல்லாம் ரொம்பப் புத்திசாலிகள். ரொம்பக் கெட்டிக்காரப் பிள்ளைகள். உங்களிடம் நல்ல திறமை இருக்கிறது.

"இந்தப் பரீட்சை உங்களுக்கு ரொம்பச் சுலபமாக இருக்கும்!" என்று சொல்லிப் பரீட்சை எழுத அனுப்பினார்கள்.

இந்தப் புகழ் உரையைக் கேட்டுவிட்டு அவர்கள் பரீட்சை எழுதப் போனார்கள். எழுதினார்கள்! சராசரிக்கும் மேலாக இருந்தது. அவர்கள் எழுதியதில் எல்லோருக்கும் நல்ல மார்க்!

அதே பள்ளிக் குழந்தைகளிடம் இன்னொரு பரீட்சை வைத்தார்கள். அதுவும் முதலிலே வைத்தது மாதிரி ரொம்பச் சுலபமான பரீட்சைதான்! இருந்தாலும் பரீட்சை எழுதப் போகின்ற பிள்ளைகளைப் பார்த்து. "இந்தப் பரீட்சை ரொம்பக் கஷ்டமாக இருக்கும். இதை திறமையாக எழுதுகின்ற அளவுக்கு உங்களுக்குப் புத்திசாலித்தனம் போதாது!" என்று ஆரம்பித்து அவர்கள் குறைகளையே சுட்டிக்காட்டி பேசிவிட்டு அதன்பின் பரீட்சை எழுத அனுப்பி வைத்தார்கள். இவர்கள் பரீட்சையை சரியாகவே எழுதவில்லை. மார்க்கும் ரொம்பக் குறைந்து போனதாம்!

இந்த வித்தியாசத்துக்கு என்ன காரணம்? புகழ்ச்சிதான். புகழ்ச்சியாக கூறி அவர்களை அனுப்பினார்கள். அதிக மார்க்! குறைகளை சுட்டிக் காட்டி இகழ்ச்சியே பேசி இவர்களை அனுப்பினார்கள். குறைவு மார்க்!

"புகழ்ச்சி என்பது ஒரு அற்புதமான மருந்து" என்கிறார்கள் நிபுணர்கள்.

"இந்தப் புகழ்ச்சி மருந்தை தாராளமாக தயார் செய்யலாம். தாராளமாக மற்றவர்களுக்கு கொடுக்கலாம். என்கிறார்கள்!" இதற்குக் காசு பணம் செலவில்லை. ஆனால் பலன் அதிகம்!

பள்ளிக்கூடத்துக் குழந்தைகளிடம் இந்த மருந்தைக் கொடுங்கள். அவர்கள் நன்றாக படிப்பார்கள். நிறைய மார்க் வாங்குவார்கள்!

வியாபாரத்திலே உங்கள் கூட்டாளிக்கு இந்த மருந்தை நீங்கள் கொடுங்கள். நன்றாக ஒத்துழைப்பார்கள். பணம் சம்பாதிக்க உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

உங்கள் குடும்பத்திலே உள்ளவர்களுக்கும் சொந்தக்காரர்களுக்கும் இந்த மருந்தைக் கொடுங்கள். சந்தோஷப்படுவார்கள். பாசமாக இருப்பார்கள். இந்த மருந்து உங்கள் கைவசம் இருந்தால் நீங்கள் எங்கே போனாலும் மகிழ்ச்சியைப் பரப்ப முடியும்.

இந்த மருந்தை நீங்கள் இன்னொருவரிடம் கொடுக்கும்போது உங்களுக்கும் அது போதுமான அளவுக்குக் கிடைக்கிறது. உங்களை சந்தோஷப்படுத்துவது. புகழும் பணமும் சேர அது உதவுகிறது.

இப்படியெல்லாம் சொல்கிறார் ஓர் உளவியல் நிபுணர் (எம். ஆர். காப்மேயர்). புகழ்ச்சி என்கின்ற மருந்துக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது.

ஆல்ஃபிரெட் ஆட்லர் என்று ஒரு மனவியல் நிபுணர். அவர் ஒரு டாக்டர். அவர் என்ன செய்வார். கவலை, பயம், கலக்கம் இவற்றுக்கெல்லாம் இரையான தன்னுடைய நோயாளிகளிடம் சென்று அவர்களைப் பார்த்து சொல்வாராம்.

"நீங்கள் எல்லாம் என்ன செய்ய வேண்டும் என்றால் யாரையாவது திருப்தி செய்ய வேண்டும் அல்லது யாருக்காவது மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும் என்று தொடர்ந்து நினைத்துக்கொண்டு இருங்கள். அப்படி இருந்தால் 14 நாளிலே உங்கள் குறைபாடுகள் எல்லாம் நீங்கிவிடும்!" என்று சொல்வாராம். அதே மாதிரியும் ஆகிவிடுமாம். அடுத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு என்ன வழி? பொதுவாக அடுத்தவர்கள் நம்மிடம் இருந்து எவற்றை எதிர்பார்க்கிறார்கள்? நமது புகழ்ச்சியைத்தான் எதிர்பார்க்கிறார்கள். பாராட்டைத்தான் எதிர்பார்க்கிறார்கள். வில்லியம் ஜேம்ஸ்-அமெரிக்க தத்துவஞானி. மனோதத்துவ நிபுணர். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "மனித இயல்பின் ஆழமான தத்துவம் என்னவென்றால் பாராட்டைப் பெறுவதற்காக ஏங்குவதுதான்! என்கிறார்.

இந்த இரகசியத்தை நாம் புரிந்துகொண்டால் போதும் வாழ்க்கையிலே வெற்றியடைவது சுலபம்.

இந்த விபரங்களையெல்லாம் எனக்கு வேண்டப்பட்ட ஒருவரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்.


உடனே அவர். "சார். நீங்கள் சொல்கின்ற பிரகாரம் நடந்துகொள்ள இப்போதே ஆரம்பித்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்து விட்டார். "என்ன எழுதுகிறீர்கள்?" என்றேன்.

"பாராட்டுக் கடிதம் எழுதுகிறேன். போன வாரம் இந்தப் பத்திரிகையிலே வந்த சிறுகதையை பாராட்டி எழுதுகிறேன். கதாசிரியரைப் புகழ்ந்து நான்கு வார்த்தை எழுதப் போகிறேன்!" என்றார்.

"கதாசிரியர் யார்?" என்று கேட்டேன்.

அவர் மெதுவாக அருகில் வந்து என் காதோடு காதாக "நான்தான் சார் அது!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் கால்நடைகள் பல பரிதாபமாக உயிரிழப்பு.

# இளமைக் காலம்

மனித வாழ்க்கையில் இளமைக்காலம் ஒரு சிறப்பான பருவ நிலையாகக் கணிக்கப்படுகிறது. கல்விப் பேறு, பொருள் தேட்டம், திருமணம் போன்ற மனித வாழ்வியலின் இன்றியமையாத பேறுகள் இளமைப் பருவத்தில் கிடைப்பவை. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்னும் முதுமொழி இளமைப்பருவமே கல்வி கற்பதற்கு வாய்ப்பான காலமென வலியுறுத்துகிறது.

இளமை என்ற சொல் தரும் பொருளின் உள்ளடக்கமாக மென்மையும் இனிமையும் உள்ளன. இன்னும் இளமைக்காலம் குழந்தைப் பருவத்தின் வளர்ச்சியாக வாழ்வியலின் நடைமுறைகளைப் பயிலும் பருவமாகக் காணப்படுகிறது.

இளமைப்பருவம் உடல் தோற்றத்திலும் தனித்துவமானது. கல்வியைப் பெறுகின்ற காலமாக இக்காலம் இருப்பதைப் பலர் உணர்வதில்லை. பள்ளிக் கல்வியைப் பெறவேண்டிய காலம், இது குறிப்பாக 16 அகவை வரை பள்ளிக்கல்வியை எல்லோரும் பெறவேண்டும். ஏனெனில் இப்பள்ளி மனித வாழ்க்கைக்குத் தேவையான அறிவுகளை வழங்கும் நிறுவனமாக உள்ளது.

மேலும் பல கலைப்பயிற்சிகளையும் கருவிக்கையாட்சிப் பயிற்சியையும் இக்காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப்பட்ட எண்ணங்களின் எழுச்சியை அடக்கிக் கூட்டுநிலையில் இயைபுபட வாழும் பயிற்சி இளையோருக்குச் சிறப்பாக வழங்கப்பட வேண்டும். தொழில் நுட்பப் பயிற்சி, வணிகப்பயிற்சி, பிறமொழி, பண்பாட்டுப்பயிற்சி என்பவற்றை இளமைக் காலத்திலே பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்காகப் பல்வேறு இளைஞர் பாசறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் இளையோர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று வாழும் நிலையும் உண்டு.

குறிப்பாகப் பல்கலைக் கழகக் கல்விப்பேற்றிற்காகச் சில ஆண்டுகள் இளையோர் குடும்பத்தைப் பிரிந்து சென்று வாழ்வர். அந்த வாழ்க்கை அவர்களைக் கட்டுப்பாடற்ற ஒரு தன்னல வாழ்வு நிலைக்கு இட்டுச் செல்வதும் உண்டு. குடும்ப நிலையிலே பேணப்பட்ட ஒழுக்க வரையறைகள் மீறப்பட்டுப் பல சிக்கல்களையும் பல குழப்பங்களையும் எதிர்கொள்ளும் இளையோர் பலருளர்.

மேலும் இளமைக் காலத்தில் திருமணம் என்னும் ஆணும் பெண்ணும் இணைந்த குடும்பவாழ்க்கையை ஏற்க வேண்டிய நிலையும் உண்டு. இளமை உணர்வுகளால் தூண்டப் பெற்று காதல் வயப்பட்ட பலர் சமூக வரையறைகளால் சிக்கல்களுக்கு உள்ளாகும் நிலையும் உண்டு.

அவ்வாறு சிக்கல்களை எதிர்கொள்வோரைக் "கல்லா இளையோர்" எனக் குறிப்பிடும் மரபும் உண்டு. எனவே அத்தகைய சிக்கல்களை எதிர் கொள்ளா வண்ணம் அவர்களை நெறிப்படுத்த வேண்டியுள்ளது.

அழகு பற்றிய எண்ணமும் செயற்பாடும் இளமைக் காலத்தில் மேலோங்கி நிற்கும். உடலழகை வெளிப்படுத்த இளமை பல முயற்சிகளை மேற்கொள்ளும். இன்று இயற்கை அழகைவிடச் செயற்கை அழகே கவர்ச்சியாக இருப்பதால் பல்வேறு அழகுபடுத்தல் முயற்சிகளும் பரவி வருகின்றன.

குறிப்பாகப் பெண்களிடையே முக ஒப்பனையும் ஆடை அணிகளும் செயற்கையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய இளமைப் பருவத்தினருக்கும் முதுமைப் பருவத்தினருக்கும் இடையே வையகம் எங்குமே ஒரு முரண்பாடு தோன்றியுள்ளது. நரை முதுமையின் அடையாளம். ஆனால் இன்று முதியோர் பலர் அந்த அடையாளத்தை மறைத்து வாழவே விரும்புகின்றனர்.

குறிப்பாக தங்களுடைய தலை நரையை மறைக்கக் கறுப்பு வண்ணம் பூசி இளமைத் தோற்றத்தோடு வலம் வருகின்றனர். அவர்களின் இளமைக்காலத்தை நீட்டி வாழ முற்படுகின்றனர்.

இது இளமைப்பருவத்தை மலினப்படுத்துவதாக உள்ளது மட்டுமன்றி இளமைக்கும் முதுமைக்குமிடையே ஒரு முரண்பாட்டையும் தோற்றுவித்துள்ளது.

இளமைக்காலம் நிலையானது அல்ல. குழந்தைப் பருவம் எவ்வாறு கடந்து செல்கிறதோ அது போல இளமைப் பருவமும் கடந்து செல்லும். எனவே அக்காலம் கடந்து செல்வதற்கு முன்னர் அக்காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடிக்க வேண்டும்.

மேலும் முதுமைப் பருவம் வரும் என்ற எதிர்பார்ப்போடு இளையோர் இருக்க வேண்டும். அதற்காகவே தனிவாழ்க்கை என்ற இளமைப்பருவ எண்ணத்தை நீடிக்க விடாமல் திருமணம் என்ற கூட்டு வாழ்க்கையில் இளமைப் பருவத்தினரை இணைத்து விடுவது தமிழர் பண்பாட்டு மரபாக உள்ளது. முதுமையும் இளமையும் இணைந்து இப் பண்பாட்டை வலியுறுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

## வெள்ளி நற்சிந்தனை 16



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

05.12.2025
கார்த்திகை 19, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 3.31மணி வரை

ரோகினி பிற்பகல்1.40 மணிவரை
சுப நேரம் 6.16-7.46 மணிவரை
இராகுகாலம் 10.46-12.16மணிவரை

விநாயக விரதம் ஆரம்பம்
சந்திராஷ்டமம்-
சுவாதி ,விசாகம்

வளவன்

**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்**
விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பொறுமையால் பெருமை காணவேண்டிய நாள்.

**மகரம்**
பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.

**ரிஷபம்**
ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொழில் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
தொழில் முன்னேற்ற கரமாக அமையும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்**
பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும், அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பொருளாதார நிலையில் திருப்தி முன்னேற்றம் காணும் நாள் .

**கும்பம்**
மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்**
குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கன்னி**
சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், அதிக செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

**தனுசு**
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

எதிரிகளை ஒழிக்க அவர்களையே நண்பர்கள் ஆக்குங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 926





"இதைக் காட்டிலும் பிரமிப்பான கட்டுக் கதைகள் சிலவற்றையும் தங்களுக்கு நான் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து புதிய பொற்காசுகள் ஆபத்துதவிகள் கூட்டத்தின் மத்தியில் குவியலாகக் கொட்டப்பட்டிருந்தன. கண்ணால் பார்த்தவனாகிய சீடன் திருமலை இதோ இருக்கிறான். தாங்கள் பணித்தால் அதைப் பற்றி விவரமாகச் சொல்லுவான்"

"ஆபத்துதவிகளின் விஷயம் தங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அந்தச் சதிகாரர்களுக்குச் சோழ ராஜ்யத்தின் பொக்கிஷத்திலிருந்தே பொருள் உதவி கிடைத்து வருகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது!" என்றார் முதன்மந்திரி.

"ஆகா! இது என்ன கட்டுக் கதை!" என்றார் சுந்தர சோழர்.

"வேண்டியதில்லை, தலைமுறை தலைமுறையாகச் சோழ குலத்துக்காக உயிரைக் கொடுத்து இரத்தம் சிந்தி வந்தவர்கள் பழுவேட்டரையர்கள். அவர்கள் என்னைக் கொல்லுவதற்காகச் சதி செய்யும் கூட்டத்திற்கு என் பொக்கிஷத்திலிருந்து பொற்காசு கொடுக்கிறார்கள் என்று அரிச்சந்திரனே வந்து சொன்னாலும் நான் நம்பமாட்டேன்."

"மன்னிக்க வேண்டும், பழுவேட்டரையர்கள் மீது அத்தகைய துரோகக் குற்றத்தை நான் சுமத்தவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே சதிகாரர்களுக்கு நம் பொக்கிஷத்திலிருந்து பொற்காசுகள் போகலாம் அல்லவா?"

"அது எப்படி முடியும்? யமன் அறியாமல் உயிர் போகக் கூடுமா, என்ன?"

"யமன் ஒருவேளை கிழப் பருவத்தில் இளமங்கை ஒருத்தியை மணம் செய்து கொண்டிருந்தால் அதுவும் சாத்யமாகலாம் அரசே!"

"பெரிய பழுவேட்டரையர் இந்தப் பிராயத்தில் கலியாணம் செய்து கொண்டது எனக்கும் பிடிக்கவில்லைதான். அதை அவரிடமே சொல்லியிருக்கிறேன். அதற்காக இம்மாதிரியெல்லாம் அவர் மீது துரோகக் குற்றம் சுமத்துவதை என்னால் சகிக்க முடியாது."

"சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் மீது நான் துரோகக் குற்றம் சுமத்தவில்லை. அவர் மணந்து கொண்ட இளைய ராணி மீதுதான் சுமத்துகிறேன்."

"ஆண்பிள்ளைகள் மீது குற்றம் சுமத்துவதையாவது பொறுத்துக் கொள்ளலாம். துர்பாக்கியவதியான அபலைப் பெண் ஒருத்தியின் மீது நீர் குற்றம் சுமத்துவது எனக்கு நாராசமாயிருக்கிறது."


"எவ்வளவு நாராசமாக இருந்தாலும் பழுவூர் இளைய ராணியைப் பற்றிய சில உண்மைகளைத் தங்களுக்கு நான் சொல்லியே தீர வேண்டும். ஒரு தடவை தங்களுக்கு நான் ஓர் உண்மையைச் சரியான சமயத்தில் சொல்லாதது பற்றி எவ்வளவோ வருத்தப்பட நேர்ந்தது. சற்று முன் தாங்களும் கோபித்துக் கொண்டீர்கள். ஆகையினால் சிறிது பொறுமையாகக் கேட்க வேண்டும்."

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## பிறவிப் பகை நட்பாக முடியாது



ஒரு ஊருக்கு வெளியே அரசமரம் ஒன்று இருந்தது. அதை இருப்பிடமாகக் கொண்டு கீரிப்பிள்ளை, எலி, பூனை, ஆந்தை ஆகிய நான்கும் வசித்து வந்தன.

கீரியும், எலியும் மரத்தின் வேரின்கீழ் உள்ள வளைக்குள் தனித்தனியாக வசித்தன.

பூனை, மரத்தின் அடியில் உள்ள பெரிய பொந்தில் வசித்தது. ஆந்தை, மரத்தின் உச்சியில் இருந்த ஒரு பொந்தில் வசித்தது.

எலியின் நிலைமைதான் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. ஆந்தை, பூனை, கீரி இவற்றின் கண்களில் படாமல், எலி தினமும் இரை தேட வேண்டியதாயிருந்தது.

ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது, அதனால் இரவில்தான் இரை தேடுவது வழக்கம்.

பூனையோ பகலிலும் இரவிலும் அருகில் இருந்த வயலுக்குச் சென்று பயமின்றி இரைதேடித் தின்று வந்தது.

பூனையைப் பிடிப்பதற்காக வேடன் ஒருவன், வயலுக்குப் போகும் வழியில், கண்ணி வைத்துவிட்டுப் போனான்.

வழக்கம் போல், எலிகளைப் பிடிக்கச் சென்ற பூனை, வேடன் போட்டிருந்த கண்ணியில் சிக்கிக் கொண்டது, தப்பிக்க வழி இல்லை.

சிறிது நேரத்தில், பதுங்கிப் பதுங்கி, திருட்டுத்தனமாக, இரை தேடி வந்த எலி, கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த பூனையைக் கண்டு துள்ளிக் குதித்தது. அப்பொழுது, ஆந்தையும் கீரியும் சேர்ந்து சென்ற போது பூனை கண்ணியில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தன.

இனி, பூனையைப் பற்றிய பயம் இல்லை. எலியைப் பிடித்து விடலாம் என்று எண்ணின.

தன்னைக் குறி வைத்து ஆந்தையும், கீரியும் வருவதைக் கண்டு எலி நடுங்கியது, கீரிக்கும் ஆந்தைக்கும் பயந்து எலி, வழியை மாற்றிக் கொண்டு, பூனையின் பக்கம் சென்றது, பூனையின் கால்கள் கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த போதிலும், ஒரே அறையில் கொன்று விடுமே என்று கலக்கமுற்று, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான, எண்ணங்களை உற்பத்தி செய்யும் பொழுது வாழ்க்கையின் ஓட்டம் எளிதாக இருக்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனைத்து எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

இயற்கை அனர்த்தத்தால் நாடு பேரழிவைச் சந்தித்துள்ளது.

உயிரிழப்புகள், காணாமல்போனவர்கள், சொத்தழிவுகள் எனப் பெரும் துன்பத்தில் மக்கள் மூழ்கித் தவிக்கின்றனர்.

இந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகின்ற பணியில் பலதரப்பும் ஈடுபடுவது கண்டு மனம் நெகிழ்கிறது.

ஆம், இயற்கை அனர்த்தம் நாட்டைப் புரட்டிப் போட்டாலும் எங்களிடம் இருக்கக்கூடிய மனிதநேயமும் இரக்கமும் ஈகையும் இன்னும் இன்னும் மேலோங்குவது கண்டு மனம் நெகிழாமல் இருக்க முடியாது.

உண்மை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிநபர்களாகவும் பொது அமைப்புகளாகவும் உதவி செய்வதற்கு முன்வந்துள்ள அத்தனை பேரையும் இருகரம் கூப்பி வணங்க வேண்டும்.

அதேவேளை இயற்கை அனர்த்தம் தொடர்பில் யார் மீதும் நாம் குற்றத்தை சுமத்த முடியாது. இயற்கை சீற்றம் கொண்டால், அதனைத் தடுப்பது யாரால்? எங்ஙனம்? முடியும்.

ஆக, இலங்கை வரலாற்றில் மிக மோசமான இயற்கை அனர்த்தம் என்று கூறக்கூடிய இப்பேரிடரை எதிர்கொள்வதிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இங்குதான் அவர் மீது – இவர் மீது என்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்தாமல், இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்வதே மனிதப் பண்பாகும்.

எனினும் எங்கள் நாட்டைப் பொறுத்தவரை எதற்கெடுத்தாலும் ஆளுந்தரப்பைக் குற்றம் சாட்டுகின்ற எங்கள் எதிர்க்கட்சிகளின் பண்பாட்டு மரபு இயற்கை அனர்த்தத்திலும் வெளிப்படுவதை உணர முடிகிறது.

ஆம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் அனுபவமிக்க அரசியல்வாதி.

அதிலும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவின் மகன்.

இதையும் கடந்து எதிர்க்கட்சித் தலைவர் எனும் பொறுப்புவாய்ந்த பதவியில் இருப்பவர்.

இருந்தும் அவர் கூறிய ஒரு விடயம் பலரையும் அதிர்ச்சியடைய வைத்தது.

அதாவது, இயற்கை அனர்த்தத்தில் இருந்து உங்களால் நாட்டை மீட்க முடியாவிட்டால், ஆட்சியை – நாட்டை என்னிடம் தாருங்கள் என அவர் கூறியிருந்தார்.

உண்மையில் அவர் கூறியது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தை விட, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையே கடுமையாகப் பாதித்தது எனலாம்.

அதாவது ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ற ஸ்தானத்தில் இருந்து கொண்டு சிறுமைத்தனமாக, உங்களால் முடியாவிட்டால் நாட்டை – ஆட்சியை என்னிடம் தாருங்கள் எனக் கேட்டுள்ளார்.

இவ்வாறு அவர் கேட்பது அவரிடம் இருக்கக்கூடிய பதவி ஆசையின் மோகத்தைக் காட்டுவதாகும்.

எனவே நாடு அனர்த்தத்தில் அகப்பட்டிருக்கும்போது அனைத்துத் தரப்பும் ஒன்றாக இணைந்து நாட்டை மீட்டெடுக்க உதவ வேண்டும். அதிலும் குறிப்பாக இது எதிர்க்கட்சிகளின் தலையாய கடமையாகும்.

# வெள்ள நீரை வெளியேற்றுவதில் அறிவு சார் அணுகுமுறை தேவை

### கோப்பாய் பிரதேசசபை எல்லையில் மண்அணை போடப்பட்டமை தொடர்பில் தவிசாளர் நிரோஷ் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

எமக்குப் பிரதேசவாதம் கிடையாது. வெள்ளநீரை வெளியேற்றுவதில் அறிவுசார் அணுகுமுறையும் அனர்த்த முகாமைத்துவத்தினையும் கொண்டுள்ளோம் என வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலிருந்து வெள்ள நீர் வரக்கூடாது எனக் கோப்பாய் பிரதேச எல்லையில் மண் அணை போடப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த விளக்கக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லூர் பிரதேச வெள்ள நீர் வலிகாமம் கிழக்கு பிரதேசத்திற்குள் உள் நுழையக் கூடாது என்று நான் செயற்படுவதாகக் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு ஆதாரமற்றது, அடிப்படையற்றது, உண்மைக்குப் புறம்பானது.

வெள்ளத்தினை அகற்றுவதில் அனர்த்த முகாமைத்துவக் கொள்கை ரீதியில் உடனடிப் பாதிப்புக்களை நிவர்த்தித்தல் மற்றும் பாதிப்புக்களை குறைத்தல், நிலைத்தகு தீர்வு நடவடிக்கைக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல் என்ற நடவடிக்கைகளிலேயே நாம் ஈடுபடுகின்றோம்.

இந்நிலையில் பொறுப்புவாய்ந்த அமைச்சர், நான் வெள்ளத்தினை மறித்து அணை கட்டியுள்ளதாகச் சாடியுள்ளார்.

அவர் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாகச் சந்திக்காது ஓரிருவர் ஊடாகத் தவறாக வழி நடத்தப்பட்டுள்ளார்: அல்லது அரசியல் ரீதியில் என்மீது சேறுபூச முயற்சித்துள்ளார்.

இங்கு பிரதேச வாதங்கள் எமக்குக் கிடையாது. பாதிக்கப்பட்டவர்களிடத்தில் அவர்களாக அகரீதியில் சிறு மண் அணை ஏற்படுத்தப்பட்டு ஒரு பகுதிக்குள் முழுமையாக வெள்ளத்தாக்கம் ஏற்படுத்தப்படாது இரு பகுதியிடத்திலும் வெள்ள நீர் சமநிலைப்பகிர்வு ஒன்று நடந்துள்ளது.

ஏற்கனவே வலிகாமம் கிழக்கில் புவியியல் அமைப்பில் தாழ்நிலமான கல்வியங்காட்டின் ஒரு பகுதிக்குள் சகல வெள்ளத்தினையும் விட்டு நூற்றுக்கணக்கான குடும்பங்களை வீடுகளில் குடியிருக்க முடியாதளவுக்கு மாற்றிவிடுவது அரச கொள்கையாகவோ அறிவார்ந்த நடவடிக்கையாகவோ அமையாது.

வெள்ள நீரை தற்போது எதிர்ப்புக் கிளம்பியுள்ள பகுதிக்குள் கொண்டு வருவதற்கு ஏற்கனவே கட்டுமானம் பற்றிய சம்பாசணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, தாழ் நிலமாக உள்ள பகுதிக்குள் நீரைக் கொண்டு வருவதில் தடையில்லை ஆனால் அப்பகுதியில் இருக்கின்ற மக்கள் குடியெழுப்பப்படாது முதலில் வலிகாமம் கிழக்குப் பகுதிக்குள் வெள்ளம் தேங்கக்கூடிய இடங்களுக்கான கால்வாய் பொறிமுறைகள் நிபுணர் அறிக்கை பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகவே காணப்பட்டது.

இதனைப் பூர்த்தி செய்வதற்கு நாம் பல தரப்புக்களுடனும் அணுகியுள்ளோம் என்றார்.

(ம-7,33)

### 'டித்வா' புயலின் கோரத் தாண்டவத்தால்

## 1,593 கி.மீ தொடருந்து பாதைகளில் 478 கி.மீ மட்டுமே பயன்பாட்டில்

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பெரும் சேதம் காரணமாக இலங்கையின் ஆயிரத்து 593 கிலோமீற்றர் தொடருந்து வலையமைப்பில் 478 கிலோமீற்றர் மட்டுமே தற்போது பயன்படுத்தக்கூடியதாக உள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையர் ஜெனரல் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார். இந்த சூறாவளி பல மாவட்டங்களில் போக்குவரத்து, விவசாயம், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புகளைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

ஆயிரத்து 777 குளங்கள், 483 அணைகள், ஆயிரத்து 936 கால்வாய்கள் மற்றும் 328 விவசாய வீதிகள் சேதமடைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 265 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 305 சிறு நீர்ப்பாசன கால்வாய்களும் அழிந்துள்ளன.

அழிவுக்குப் பின்னர் இதுவரை 246 வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் நாடு முழுவதும் 22 பாலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு மீட்பு 91 சதவீதமாக உயர்ந்துள்ளது. இருப்பினும் நுவரெலியா மாவட்டத்தில் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட 35 இலட்சத்து 31 ஆயிரத்து 841 மின்சார இணைப்புகளில் 72 சதவீத இணைப்புக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையர் ஜெனரல் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

(நி)

### வட்டியில்லா மாணவர் கடன்திட்டம்

## விண்ணப்ப காலம் நீடிப்பு

(கொழும்பு)

வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் 10 ஆவது கட்டத்திற்கான விண்ணப்பக் காலக்கெடு 2025.12.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் விண்ணப்ப காலம் 2025.11.01 முதல் 2025.11.30 வரை அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் பேரிடர் சூழ்நிலை காரணமாக இந்தக் கடன் திட்டத்திற்கான விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2022, 2023 அல்லது 2024 ஆம் ஆண்டுகளில் முதல் அல்லது இரண்டாம் தவணையில் கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (உயர்தரம்) தேர்வை எழுதிய மாணவர்களிடமிருந்தும், 2025 ஆம் ஆண்டில் மீண்டும் உயர்தரத் தேர்வை எழுதிய மாணவர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்திற்கான விண்ணப்பங்களை www. studentloans.mohe.gov.lk என்ற இணையத் தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

(நி)

அறிவுக்கூர்மை இல்லாத சமூக வலைத்தள பதிவு. பாதுகாப்பில்லாத வீட்டிற்கு என்றும் ஒப்பானது.
16 2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள அனர்த்தம்
# மலிபன் நிறுவனத்தால் பிஸ்கட் வழங்கி வைப்பு




(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் கடை உரிமையாளர்களினாலும் தன்னார்வலர்களினாலும் அத்தியாவசியப் பொருட்கள் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தின் அனர்த்த நிவாரண குழுவிடம் கையளிக்கப்படுகின்றன.

அந்தவகையில் மலிபன் கொம்பனியின் வன்னிக்கிளை முகாமையாளர் மலிபன் பிஸ்கட் பெட்டிகளை தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தரிடம் கையளித்திருந்தார். (8)

# சாவகச்சேரி உப்புக்கேணிக்குளம் மேலதிக நீர் கடலுக்கு கடத்தப்படுகிறது



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாவகச்சேரி நகர சபையின் ஆளணி உதவியுடன் சாவகச்சேரி-உப்புக் கேணிக் குளத்தினுடைய மேலதிக நீர் நீர்ப் பம்பியின் உதவியுடன் கடலுக்கு கடத்தப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரி நகரசபை கடந்த மாதம் குளத்தினை தூர்வாரி நீரின் கொள்ளளவை அதிகரித்திருந்தது. இருப்பினும் அண்மையில் பெய்த கனமழை காரணமாக குளம் நிறைந்து அருகில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர் கொண்டிருந்தனர். இதன்போது மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக அவதானித்த தென்மராட்சிப் பிரதேசசெயலர் சத்தியசோதி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் நீர்ப்பம்பி மற்றும் சாவகச்சேரி நகரசபையின் ஆளணி வளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மேலதிக வெள்ள நீரை கடலுக்குள் கடத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி குளத்தின் மேலதிக நீர் வடிந்தோடும் வாய்க்கால் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடங்களால் முற்றாக தடைப்பட்டிருப்பதாலும் அதனை மீள உருவாக்குவதில் பல சவால்கள் காணப்படுவதாலும் உடனடித் தீர்வாக தனியார் காணி ஒன்றின் ஊடாக வெள்ள நீர் கடத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளையில் மேற்படி குளத்திற்கான நிரந்தர வாய்க்கால் அமைக்கும் முயற்சியையும் பிரதேச செயலகம் மற்றும் நகரசபை ஆகியன முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# ஞானச்சுடர் மலர் வெளியீடு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதாந்தம் வெளியீடு செய்யப்படுகின்ற ஆன்மிக மலரான ஞானச்சுடர் 335 ஆவது மலர் வெளியீடு கடந்த 28/11/2025 அன்று வெளியீடு செய்யப்பட்டது. (8-60)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உணவுப்பொதிகள் வழங்கல்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 225 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று இதனை வழங்கி வைத்தார். (8-60)

# பூநகரிப் பகுதியில் 132 குடும்பங்கள் பாதிப்பு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 132 குடும்பங்களைச் சேர்ந்த 370 பேர் 5 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக் கப்பட்டனர்.

அத்துடன் அவர்களுக்கு மூன்று வேளையும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பூநகரி பிரதேச அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் வழங்கப்பட்டன. (8-84)

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

கனமழையால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி-மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராம மக்களுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதி மக்கள் வெள்ளத்தால் தமது வீடுகளில் இருந்து வெளியேறி அருகில் உள்ள பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள நிலையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் நேரடியாக விஜயம் செய்து வர்த்தகர்களிடம் சேகரித்த அத்தியாவசியப் பொருட்களை வழங்கியுள்ளனர். (8-30)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800-1200 | 700 | 600-800 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 240 | 190-200 | -- |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 250 | 300 | 400 | 200 |
| தக்காளி | 500 | 550 | 700 | 500 | 600 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 200 | 150 | 200 | 80 |
| கோவா | 300 | 200 | 200 | 400 | 180 | 200 |
| கரட் | 800 | 600 | 300 | 600 | 1000 | 400 |
| பூசணி | 120 | 140 | 50 | 150 | 100 | 70 |
| புடோல் | 300 | 400 | 120 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 50 | 80 | 50 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-350 | 200 | 250-400 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 200 | 240 | 150 | 240 | 200 | 150 |
| பாகற்காய் | 800 | 1200 | 850 | 1600 | 600 | 400 |
| வெண்டக்காய் | 300 | 300 | 120 | 400 | 250 | 200 |
| கருணைக்கிழங்கு | 200 | 220 | 200 | 300 | -- | 300 |
| பயற்றங்காய் | 800 | 1000 | 1400 | 800 | -- | 600 |
| லீக்ஸ் | 800 | 550 | 250 | 600 | -- | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 120 | 450 | 400 | 200 |
| கறிமிளகாய் | 1200 | 800 | 600 | 800 | 1100 | 700 |
| முருங்கைக்காய் | 1500 | -- | 400 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 850 | 400 | 800 | -- | 600 |
| கத்தரிதம்புள்ள | 1000 | 700 | 120 | 600 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 140-200 | 250 | 250 | -- | 150 |
| தேசிக்காய் | 1200 | 700 | 600 | 400 | 1000 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 800 | -- | 475 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | 800 | -- | -- |
| முள்ளங்கி | 300 | 200 | 150 | 320 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 | -- | 40 |
| வல்லாரை | 60 | 80 | 50 | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 200 | 100-150 | 120 | 150 | -- | 60 |

# விநாயகர் விரதம்



(யாழ்ப்பாணம)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய விநாயகர் விரதம் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இக்காலங்களில் தினமும் மு.ப 9 மணிக்கு சகஸ்ஹரநாமார்ச்சனையும் பி.ப 4 மணி முதல் பிள்ளையார் கதை படிப்பு, உருத்திரா அபிஷேக ஆராதனை, ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட வசந்தமண்டப பூசை, விநாயகர் அகவல் பாராயணம் என்பன நிகழவுள்ளது.

24 ஆம் திகதி புதன்கிழமை காலை கணபதிஹோமமும் மாலை கஜமுக சூரசங்காரமும் இடம்பெறுமென ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது. (8)



முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஒட்டுசுட்டான் ஞானகலா மில் 1000kg அரிசியை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்கு...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பேரிடரால் பாதிக்கப்பட்ட முழு நாட்டுக்கும் சுமார் 10,290 மில்லியன் ரூபாவை முதற் கட்டமாக ஒதுக்கியுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பில் பிரதேச செயலகங்கள் ரீதியாக இந்த நிதி பங்கீடு செய்யப்படவுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்தில் அதிக பாதிப்புக்கு உள்ளான மன்னார் மாவட்டத்திற்கு விசேடமாக 954 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணத்துக்கு 365 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சிக்கு 206 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவுக்கு 189 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 158 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உயிர் இழப்புகள் குறைவாக இருந்தாலும், விவசாயம் மற்றும் பண்ணை வளர்ப்பு அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகவும், மன்னாரில் மட்டும் சுமார் 15,000 கால்நடைகள் உயிரிழந்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 6033
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 3 9 9 1 2 4

சுப தவசக
2025.12.04 8149
மகரம் 21 38 44 0826

தன நிதானய
திகதி - 2025.12.04
சீட்டிழுப்பு இலக்கம் - 2063
F 28 33 51 69 F

மெகா பவர்
திகதி 04/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2381
K 21 01 52 65 67

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4275
சீட்டிழுப்பு திகதி 04.12.2025
C 23 31 67 77
C

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 1342
கும்பம் 23 24 42 52 கும்பம்

## அனர்த்தத்தால்...

மணிக்கு வெளியிடப்பட்ட சமீபத்திய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 341 பேர் தொடர்ந்தும் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரூ.50 பில்லியன்...

கூட்டத்தின்போது இதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றது.

20 பில்லியன் ரூபாய் அபிவிருத்தி நிவாரணங்களுக்காகவும் 30 பில்லியன் ரூபாய் அபிவிருத்தி உதவிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார். (ம-7)

## வலி.கிழக்குப்...

ணியின் உறுப்பினர் துஷ்யந்தன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-7)

## இலங்கையில்...

மிகப்பெரிய நிலநடுக்க நிகழ்வும் இடம்பெறும் என அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

ஊடகம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக்கு கீழாக அல்லது இலங்கையை அண்மித்திருக்கக் கூடிய இந்திய கவசத் தகட்டுடன் சேர்ந்த பகுதிகளில் மிகச்சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அண்மித்த காலத்தில் அதிக நிலநடுக்கங்கள் பதிவாகுவது என்பது என்றோ ஒரு நாள் பாரிய நிலநடுக்கம் ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையினுடைய வரலாற்றில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடிய காலநிலைசார் அனர்த்தத்தில் இருந்து மக்கள் மீண்டு கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இன்னமும் மத்திய மலைநாட்டின் பல பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இலங்கை இந்த அனர்த்தத்திலிருந்து மீண்டு வரும் நிலையில் முழுமையாக மீளுவதற்கு இன்னும் பல மாதங்கள் செல்லும் என்பது கசப்பான உண்மை. இன்னும் ஒரு நாள் இந்தப் புயல் இலங்கையில் தங்கியிருந்தால் இன்று நடந்த பாதிப்புக்களின் 5 மடங்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

இந்த அனர்த்தம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் போதுமான எச்சரிக்கை விடுக்கவில்லை என்றே நானும் கருதுகின்றேன் என்று சுட்டிக்காட்டினார். (ம-7)

## இலங்கையை...

வேலைத்திட்டத்திற்கு சர்வதேச உதவிகள் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

"டித்வா" சூறாவளிக்கு பின்னரான நாட்டின் நிலைமையை மதிப்பிடுவதற்கும் நிவாரணம், மீட்புப் பணிகள் மற்றும் புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கான உதவிகளை ஒருங்கிணைப்பதற்கு இராஜதந்திர தூதுக்குழு மற்றும் சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களுடன் நிதியமைச்சு நேற்று முன்தினம் (03) கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி, நீடிக்கப்பட்ட கடன் வசதியின் 6 ஆவது தவணையான சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எதிர்வரும் 02 வாரங்களுக்குள் இலங்கைக்கு வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## நெடுந்...

வலைகள் அறுக்கப்பட்டுள்ளன.

மேலும் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முதல் இரண்டு கிலோ மீற்றருக்கு மீன்பிடிப் வலைகள் வெட்டப்பட்டுள்ளதோடு நயினாதீவு மீனவர்களின் வலைகளும் வெட்டப் பட்டுள்ளன. (ம-7,33,60)

## தையி...

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டக் களத்தில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வாயத் தர்க்கத்தில் ஈடுபட்ட பொலிஸார் போராட்டக்காரர்கள் அமைத்திருந்த கூடாரங்களை அகற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம் - தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் இரண்டாவது நாளாக நேற்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதா மாதம் முன்னெடுக்கும் தொடர் போராட்டம் நேற்று முன்தினம் (03), நேற்று (04) தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் நடத்தப்பட்டது.

போராட்டக்காரர்கள் அமைத்திருந்த கூடாரங்களை பொலிஸார் அகற்றியதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (ம-7)

## விலங்கியல் பூங்கா திறப்பு

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக மூடப்பட்டிருந்த விலங்கியல் பூங்கா திணைக்களத்திற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களும் பொது மக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சி சாலை மற்றும் ரிதியகம சஃபாரி பூங்கா என்பவற்றை இவ்வாறு திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
04.12.2025 வெற்றி வாரம் 0741
ஆங்கில எழுத்து P மற்றும் வெற்றி இலக்கம் 5 8 1 7 7 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,778,119.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3007
சீட்டிழுப்பு திகதி 2025.12.04 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 45 60 79 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,980,504.00

சனிதா
திகதி 04.12.2025 வெற்றி வாரம் 5168
வெற்றி இலக்கங்கள் 27 44 53 72 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,914,826.40

சசிரி
வெற்றி வாரம் 837
சீட்டிழுப்பு திகதி 04.12.2025 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 12 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.1,810,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4719
சீட்டிழுப்பு திகதி 04.12.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 11 25 61 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,816,542.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 11 32 40 57 59
2183 04.12.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.610,808,329.40

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை வெற்றி வாரம்: 2833
சீட்டிழுப்பு திகதி: 2025.12.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,891,103.20
வெற்றி இலக்கங்கள் 09 41 50 74 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

### வாகன உதவியாளர்

- பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர் தேவை.
- வயதெல்லை 25 – 45
- குறிப்பு : திருநெல்வேலியை அண்மித்த பகுதியினர் விரும்பத்தக்கது.

(6066)

தொடர்பு : **076 328 0381**

## மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1761)

**S.Sharma J.P**
**www.thaalee.com**
077 539 3728



அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிக் கொண்டிருந்தபோது வென்னப்புவ, லுனுவில பகுதியில் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த விமானி குரூப் கப்டன் நிர்மால் சியம் பலாபிட்டியவின் பூத வுடலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

## Voyzant இந்தியா கோவில்கள்

- ஆறுபடை வீடு
- திருப்பதி
- திருநாகேஸ்வரம்
- இராமேஸ்வரம்
- சிதம்பரம்
- ஶ்ரீரங்கம்
- வைத்தீஸ்வரன்
- மேல்மருவத்தூர்
- திருவண்ணாமலை
- மதுரை மீனாட்சி
- திருவெண்ணெய்நல்லூர்
- சங்கரப்பாணி
- திருவானைக்கா
- காஞ்சிகாமாட்சி
- ராமர்கோவில்
- திருக்கடவூர்

**உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்**

**189,000/=** (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு) (C-4492)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: **Voyzant (PVT) Ltd**

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

**077 284 9535, 021 222 6866**

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

## பணியாளர்கள் தேவை

அன்பு சிறுவர் பராமரிப்பு நிலையம், கிளிநொச்சி.

- **முகாமையாளர்**
  வயது 30 தொடக்கம் 55, A/L
- **பராமரிப்பாளர்கள்**
  வயது 25 தொடக்கம் 55, O/L

(1759)

**071 535 4500**

## கனடா - வரி இல்லாமல்

### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3580/- |
| 11-16 Kg | 2610/- |
| 21-22 Kg | 2380/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4496)

- UK 11Kg - 1420/-
- France 11Kg - 2170/-
- Germany 11Kg - 2020/-
- Swiss 11Kg - 2510/-
- Australia 11Kg - 2150/-
- Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்

- கொழும்பு
- புதுக்குடியிருப்பு
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- மட்டக்களப்பு
- கொடிகாமம்
- சுன்னாகம்
- மானிப்பாய்
- திருகோணமலை
- புத்தூர்
- யாழ்ப்பாணம் (Main Branch)
- நெல்லியடி
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- சங்கானை
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 02 - 1936 | 03 - 12 - 2025 |



# நாகலிங்கம் தவமணி

அச்சுவேலி தெற்கு முத்துமாரிஅம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் M.S வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தவமணி அவர்கள் கடந்த (03.12.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு நாகலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகராசா அவர்களின் அன்புச் சகோதரியும் கருணா, காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் ரகுநாதன், அருணா ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரன், விமலாதேவி, நிறைமதி, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கம்சிகா - றோகான்குமார், கிரிசாந் - கீர்த்தனா, தர்சிகா -அசோக், ரவீனா, மார்க், விஷ்ணுகா, வினுயன், ஜனுசன், றக்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றிகானா, யகானா, ருக்சிதா, அர்சித், நிக்சிதா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை கோண்டாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

M.S. வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 396 5264
077 125 0425

(6063)

## காணி விற்பனைக்குண்டு

### யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துக்கட்டி வீதியில்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்.

(6067)

தொடர்பு :

**076 990 3039, 074 029 2338**

## காணி விற்பனைக்கு உண்டு

### யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன் 48 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

(6067)

தொடர்பு :

**076 860 2770, 076 987 8617**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org